செய்தி வெளியீடு எண்: 980 நாள்:21.12.2020

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (21.12.2020) தலைமைச் செயலகத்தில், சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் மாற்றுத் திறனாளிகளின் நலனிற்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு 2019 மற்றும் 2020–ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் விதமாக, சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதுகள், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருதுகள், ஆரம்பநிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் என 35 விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 3–ஆம் நாள் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சிறந்த மாற்றுத்திறனாளிகளுக்கும் மற்றும் அவர்களின் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கும் தமிழ்நாடு அரசால் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2019–ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விருதுகள் வழங்கும் வகையில், சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள் சென்னை – ஹோப் பொது நல அறக்கட்டளை, சென்னை – மித்ரா மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையம் மற்றும் சென்னை – ஆட்ரியா கன்வர்ஜென்ஸ் டெக்னாலஜிஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதுகள் சகோதரி மரிய பிரிதீகா, திரு.ல. மணிகண்டன் மற்றும் அரிமா டாக்டர் லவ் ஓ.ஏ.கே. நாகராஜன் ஆகியோருக்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் திருமதி ஐ. ரீட்டா எலிசபெத் கிறிஸ்டீனா, திரு. இரா. நாகநாதன் மற்றும் திருமதி ரோ. மரிய ஜெஸி ஆகியோருக்கும், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள் திரு. நா. பிரபு, டாக்டர் மா. கார்த்திகேயன், திரு. வே. ராதாகிருஷ்ணன், திருமதி சுதா சீனிவாசன், செல்வி சிரவந்தி சுதாகர் மற்றும் திரு.ச.ஜெகதீஸ் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது இராணிப்பேட்டை – பாரத மின் மிகு நிறுவனத்திற்கும், ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த

ஆசிரியருக்கான விருதுகள் திருமதி க. கற்பகம் மற்றும் திருமதி வே. டிலைக்றா ஜெஸி ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் திரு. டி. சந்திரமோகன் மற்றும் திரு.ஜி. மூர்த்தி ஆகியோருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

மேலும், 2020–ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விருதுகள் வழங்கும் வகையில், சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள் திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூகப் பணி மையத்திற்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னை இல்லத்தின் திருமதி ப. ஸ்ரீதேவி அவர்களுக்கும், சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் திரு. ஜெ. மஞ்சுநாதன், திரு. ச. ராஜா மற்றும் முனைவர் கி. தனலெட்சுமி ஆகியோருக்கும், சிறந்த பணியாளர் / சுய தொழில் புரிபவருக்கான விருதுகள் திரு. ச. இராஜசேகர், திரு. எம். டென்னிஸ், திரு. ஜி. சுரேதா, திரு. டே. கென்னடி மற்றும் திரு. து. மதன் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய நிறுவனத்திற்கான விருது வேலூர் – ஓர்த் அறக்கட்டளைக்கும், ஆரம்ப நிலை பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறந்த ஆசிரியருக்கான விருதுகள் செல்வி சா. ஜெயமாலா மற்றும் திருமதி ரா. ராமஜெயம் ஆகியோருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான விருதுகள் திரு. ஆர். மணவாளன் மற்றும் திரு. எஸ். முருகன் ஆகியோருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

இவ்விருதுகளை பெறும் விருதாளர்களுக்கு தலா 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத் துறை செயலாளர் திரு.சி.விஜயராஜ்குமார், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திரு.ஜானிடாம் வர்கீஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**